### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# பெறுமதி சேர் வரி

## 2017 ஜுன் மாதத்திற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் விபரத்திரட்டுக்களை சமர்ப்பித்தலும் 2017 ஜுன் 30 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான இறுதிக் கொடுப்பனவுகளை செலுத்துதலும் விபரத்திரட்டுக்களை சமர்ப்பித்தலும்

| | |
|---|---|
| **கொடுப்பனவுகள்** | |
| ❖ எவரேனும் ஒரு ஆள் அல்லது பங்குடமை இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருட்கள் அவ் ஆளினால் அல்லது அப்பங்குடமையினால் விநியோகிப்படுமாயின், அவ் ஆள் அல்லது அப்பங்குடமை, பெறுமதி சேர் வரியைச் செலுத்த வேண்டிய இறுதித் திகதி | 20.07.2017 |
| ❖ ஏனைய ஆட்கள் அல்லது பங்குடைமைகள் (மேலே குறிப்பிட்ட ஆட்கள் அல்லது பங்குடமை வியாபாரங்கள் அல்லது நிதிச் சேவைகளை வழங்கும் ஆட்களின் அத்தகைய நிதிச் சேவைளுக்கான பெறுமதி சேர் வரியைத் தவிர) 2017 ஜுன் 16 இலிருந்து 30 ஆந் திகதி வரையான காலப் பகுதிக்கான கொடுப்பனவைச் செலுத்துவதற்கான இறுதித் திகதி:<br>**(2017 ஜூலை 15 ஆந் திகதி சனிக்கிழமை என்பதனால் 2017 ஜூலை 14 ஆந் திகதிக்கு முன்னர் விபரத்திரட்டைச் சமர்ப்பிப்பது அவசியமாகும)**<br>(2017 ஜுலை 1 இலிருந்து 15 வரையான காலப் பகுதிக்கான கொடுப்பனவை 2017.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளுதல் வேண்டும்) | 15.07.2017 |
| ❖ கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான இறுதித் திகதி : -<br>- 2017 டிசம்பர் 31 இல் முடிவடையும் காலப் பகுதிக்கு தமது வருடாந்தக் கணக்குகளைத் தயாரிக்கும் நிதிச் சேவைகளை வழங்குநர்கள், 2017.06.30 ஆந் திகதி முடிவடையும் ஆறு மாத காலப் பகுதிக்காக, நிதிச் சேவைகளுக்கான பெறுமதி சேர் வரியின் ஆறாவது மாதாந்த கொடுப்பனவைச் செலுத்துதல்; அல்லது<br>- 2018 மார்ச் 31 இல் முடிவடையும் காலப் பகுதிக்கு தமது வருடாந்தக் கணக்குகளைத் தயாரிக்கும் நிதிச் சேவைகள் வழங்குநர்கள், 2017.09.30 ஆந் திகதி முடிவடைந்த ஆறு மாத காலப் பகுதிக்காக, நிதிச் சேவைகளுக்கான பெறுமதி சேர் வரியின் மூன்றாவது மாதாந்த கொடுப்பனவைச் செலுத்துதல் | 20.07.2017 |
| **விபரத்திரட்டுகள்** | |
| ❖ பெறுமதி சேர்வரி விபரத் திரட்டுக்களை மாதாந்தம், காலாண்டில், அல்லது அரையாண்டில் சமர்ப்பிக்கும் வரி செலுத்துநர்கள் அவற்றைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 31.07.2017 |

குறிப்பு :

➢ ஏதேனும் தொடர்புடைய வரி விபரப்பட்டியல் அல்லது சுங்க வெளிப்படுத்துகையுடன் தொடர்புடைய உள்ளீட்டு வரிகளின் கழிப்பனவானது, வெளியீட்டு பெறுமதி சேர் வரியிலிருந்து, சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்படலாம். எவ்வாறாயினும் இக்கழிப்பனவானது, வெளியீட்டு பெறுமதி சேர் வரியின் 100% இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**பெறுமதி சேர் வரியை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தத் தவறியமை, ஏதேனும் விசேடமான சூழ்நிலைகளின் காரணமாகவே நிகழ்ந்தது எனவும் அக்காரணம் நியாயமானது எனவும் ஆணையாளர் நாயகம் திருப்தியடைந்தாலேயன்றி அதற்கான தண்டத் தொகை இல்லாதாக்கப்படவோ குறைக்கப்படவோ மாட்டாது.**

**கொடுப்பனவுகள் ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளையில் மேற்கொள்ளப்படலாம்.**

**தயவுகூர்ந்து காசோலையின் மறுபுறத்தில் வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தையும் வரி அறவீட்டுக் காலத்தையும் குறிப்பிடவும்.**

**பெறுமதி சேர் வரிக்கான கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது புதிய கொடுப்பனவுப் படிவங்களைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் பின்வரும் கொடுப்பனவுக் குறியீடுகளை அவற்றுடன் தொடர்புடைய காலப் பகுதிகள் தொடர்பில் குறிப்பிடுவதும் அவசியமாகும்.**

| காலப் பகுதி | | உரிய திகதி | கொடுப்பனவுக் குறியீடு |
|---|---|---|---|
| 16/06/2017 | 30/06/2017 | 15/07/2017 | 17232 |
| 1/06/2017 | 30/06/2017 | 20/07/2017 | 17230 |
| 1/07/2017 | 15/07/2017 | 31/07/2017 | 17311 |

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.ird.gov.lk

தயவுசெய்து கொடுப்பனவை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும்

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

**வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக**